தேசிய ஊரக வேலை திட்டத்தில் ரூ.1,679 கோடி நிலுவை தொகையை உடனே வழங்குங்கள்

மத்திய அமைச்சருக்கு ஸ்டாலின் கடிதம்

சென்னை, மார்ச் 14–

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்கக் கோரி ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் கிரிராஜ் சிங்குக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஊரகப் பகுதிகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து குடும்பங்களுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் முக்கியமான திட்டங்களில் ஒன்றாகும். மேலும், ஊரக மக்களுக்கு வாழ்வாதார வாய்ப்பை வழங்குவதுடன், நீடித்த மற்றும் நிலையான ஊரக சொத்துக்களை உருவாக்கி, உள்ளூர் மக்களின் முனைப்பான பங்கேற்புடன் கிராமங்களை மேம்படுத்தும் ஒரே திட்டமாகும் என்று முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இத்திட்டம் அனைவரையும் உள்ளடக்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றும் இத்திட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களில் 86 விழுக்காடு மகளிர், 29 விழுக்காடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர் என்பதையும் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் பல்வேறு அளவீடுகளில் தமிழ்நாடு எப்போதும் திட்ட செயலாக்கத்தில் முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதையும் முதலமைச்சர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதுவரை, மூன்று தவணைகளில் 37 கோடி மனித சக்தி நாட்களுக்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றும் 6.03.2024 வரை தமிழ்நாடு 40.51 கோடி மனித சக்தி நாட்களை எட்டியுள்ளது என்றும் இதில் 68.68 இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 79.28 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

2023–24 ஆம் ஆண்டில், 6.11.2024 வரை தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவேண்டிய ஊதியமான ரூ.8,734.32 கோடி நிலையில், ரூ.7,712.03 கோடி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்றும் நவம்பர் 2023 மற்றும் டிசம்பர் 2023 ஆகிய ஆண்டுகளுக்கான ஊதியப் பொறுப்பு 5.1.2024 அன்று ரூ.1,022.29 கோடியாக உள்ளதையும் முதலமைச்சர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக தாம் 10.01.2024 அன்று ஊதியத்தை முன்கூட்டியே வழங்குமாறு ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம் எழுதியதையடுத்து, ஒன்றிய அரசு 15.01.2024 மற்றும் 30.01.2024 ஆகிய நாட்களில் ரூ.1,388.91 கோடி ஊதியத்தை விடுவித்தமைக்காக தனது நன்றியையும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், நவம்பர் 2023 கடைசி வாரத்திலிருந்து திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாததால், அதனுடன் பொறுப்புத் தொகையும் ரூ.1,678.83 கோடியாக சேர்ந்துள்ளதுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் இது டிசம்பர் 2023 முதல் பிப்ரவரி 2024 வரை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபுரிந்த 24.21 லட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, 5.1.2024 வரை திரட்டப்பட்ட மொத்த ஊதிய பொறுப்புத் தொகையான ரூ.1,678.83 கோடியை தொழிலாளர்களுக்கு உடனடியாக ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். இது தொடர்பாக ஒன்றிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் அமைச்சரின் தனிப்பட்ட தலையீட்டை தாம் எதிர்பார்ப்பதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

லிட்டருக்கு ரூ.50 தள்ளுபடி விலையில் ஆவின் நெய் விற்பனை

சென்னை, மார்ச் 14–

பொதுமக்களுக்கு அன்றாடம் தேவைப்படுகின்ற மற்றும் பொதுமக்கள் அதிகம் விரும்பி பயன்படுத்தும் ஆவின் நெய்யினை கடந்த மூன்று மாதங்களாக லிட்டர் ஒன்றுக்கு ரூ.50 தள்ளுபடி செய்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இந்த தள்ளுபடியானது பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதைத் தொடர்ந்து, இந்த தள்ளுபடியினை இம்மாத இறுதி வரை நீட்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பொதுமக்கள் ஆவின் நெய்யினை தள்ளுபடி விலையில் 31–ந் தேதி வரை ஆவின் பாலகங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து கொள்முதல் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ஆவின் பனீர் கடந்த மூன்று மாதங்களாக சலுகை விலையில் 200 கிராம் பனீர் ரூபாய் 120 லிருந்து ரூபாய் 10 குறைத்து ரூபாய் 110 க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்ததள்ளுபடியினையும் தொடர்ந்து நீட்டிக்க ஆவின் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

ஒரே நாடு ஒரே தேர்தல் சாத்தியமே: ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

புதுடெல்லி, மார்ச் 14–

ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையிலான குழுவினர், இன்று அறிக்கையை ஜனாதிபதி திரவுபதி முர்முவிடம் சமர்ப்பித்தனர்.

ஒரே நாடு; ஒரே தேர்தல் திட்டத்தின் சாத்தியக்கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில், மத்திய உள்துறை அமைச்சர்அமித் ஷா, ராஜ்யசபா முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் குலாம் நபி ஆசாத், 15வது நிதி கமிஷனின் முன்னாள் தலைவர் என்.கே.சிங், மூத்த வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே உள்ளிட்ட பலர் இடம் பெற்றுள்ளனர்.

தேர்தல் ஆணையம், பல்வேறு அரசியல் கட்சிகள், அமைப்புகள், பொது மக்களிடம் கருத்துகளைக் கேட்டறிந்து 191 நாட்களாக ராம்நாத் தலைமையிலான குழு ஆய்வு செய்தது. மேலும் ஒரே நாடு ஒரே தேர்தல் தொடர்பாக உயர்மட்ட குழுவுக்கு பொதுமக்கள் இடம் இருந்து சுமார் 5000க்கு மேற்பட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டு இருந்தது. அந்த குழு 18,626 பக்கங்களைக் கொண்ட அறிக்கையை தயாரித்து இன்று ஜனாதிபதியிடம் தாக்கல் செய்துள்ளது.

ஒரேநாடு ஒரே தேர்தல் குறித்து ஆராய அமைக்கப்பட்ட ராம்நாத்கோவிந்த் குழு அறிக்கையில், முன்கூட்டியே திட்டமிட்டால் ஒரே நேரத்தில் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற தேர்தல்களை நடத்த வழி உள்ளது என்றும், அதற்கேற்ப சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றம், சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தலை முதல் சுற்றிலும், அதைத் தொடர்ந்து 100 நாள்களுக்குள் உள்ளாட்சித் தேர்தலை இரண்டாவது சுற்றிலும் நடத்தலாம் என்று கோவிந்த் குழு பரிந்துரைத்துள்ளது. தொங்குப் பேரவை, நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தால், மீதமுள்ள ஐந்தாண்டு காலத்திற்குள் புதிய தேர்தல் நடத்தலாம், முதல் முறை ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும்போது, நாடாளுமன்ற தேர்தல் நடக்கும் காலம்வரை, மற்ற சட்டமன்ற பதவிகள் நீடிக்க வழிவகை செய்ய வேண்டும். அதற்கேற்ப, தேர்தல் ஆணையம், ஒரே வாக்காளர் பட்டியல், வாக்காளர் அடையாள அட்டைகளை நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் வகையில் உருவாக்க வேண்டும்.

மோசடி நபர்களிடமிருந்து பயணிகளை பாதுகாக்கும் வகையில்

சென்னை விமான நிலையத்தில் "காவல் ரோந்து" திட்டம்: கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் துவக்கி வைத்தார்

சென்னை, மார்ச் 14–

சென்னை விமான நிலையத்தில் மோசடி நபர்களிடமிருந்து பயணிகளை பாதுகாக்கும் வகையில் "விமான நிலைய காவல் ரோந்து" திட்டத்தை கமிஷனர் சந்தீப்ராய் ரத்தோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சென்னை பெருநகர காவல் துறை கமிஷனர் சந்தீப் ராய்ரத்தோர் உத்தரவின்பேரில், குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து கைது செய்து குற்றங்களை குறைக்க புதிய யுக்திகள் மற்றும் நவீன திட்டங்கள் கையாளப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்கள் பாதுகாப்புக்காகவும், அவர்களின் நலனுக்காகவும் பல்வேறு நலத்திட்டங்கள், செயலிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, கமிஷனர் சந்தீப் ராய் ரத்தோர் சென்னை, மீனம்பாக்கம், விமான நிலைய வளாகத்தில், பயணிகள் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக "விமான நிலைய காவல் ரோந்து" (Airport Police patrol) திட்டத்தை கொடியசைத்து துவக்கி வைத்து 10 காவல் ஆளிநர்களுக்கு பேட்ஜ்கள் வழங்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:

விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகள் மற்றும் உடன் வருவோரையும், அவர்களது உடைமைகளையும் பாதுகாக்க, சென்னை பெருநகர காவல்துறையின் புதிய முயற்சியாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக, பயிற்சி பெற்ற 10 காவலர்கள், இத்திட்டத்திதற்கென வழங்கப்பட்டுள்ள 2 பிரத்யேக ரோந்து வாகனம், 1 பேட்டரி வாகனம் மற்றும் நவீன சாதனங்களுடன் 24 மணி நேரமும் சுழற்சி முறையில் ரோந்து பணியில் ஈடுபடுவர். மேலும், வயதான நபர்கள், வெளிநாட்டு நபர்களுக்கு தேவைப்படும் விவரங்களை வழங்கவும், உதவிகள் செய்யவும் காவலர்கள் ரோந்து பணியில் ஈடுபடுவர். இதனால் குற்ற சம்பவங்கள் நிகழாமல் தடுக்கப்படுவதுடன் பயணிகளின் உடைமைகள் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பர். மேலும், புதிதாக வரும் பயணிகளுக்கு டாக்சி வாகன உதவி, அவசர உதவி, போன்றவைகள் கிடைக்கவும் வழிகாட்டவும், விமான நிலைய காவல்ரோந்து காவல் ஆளிநர்கள் பணியாற்றுவதால், பயணிகளை ஏமாற்றும் மோசடி நபர்களிடமிருந்து பயணிகள் பாதுகாக்கப்படுவர்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், விமான நிலைய இயக்குநர் சி.வி.தீபக், சென்னை பெருநகரகாவல்கூடுதல் ஆணையாளர் (தெற்கு) பிரேம் ஆனந்த் சின்ஹா, இணை ஆணையாளர்கள் எம்.ஆர். சிபிசக்ரவர்த்தி (தெற்கு மண்டலம்) மகேஷ்குமார் (போக்குவரத்து தெற்கு) மத்திய தொழிற் பாதுகாப்பு படை துணைத்தலைவர் கே.வி. ஸ்ரீராம், புனித தோமையர்மலை துணை ஆணையாளர் டாக்டர் எம்.சுதாகர், காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் கலந்து கொண்டனர்.

வெயிலின் தாக்கம்: 48 கோவில்களில் நாளை முதல் பக்தர்களுக்கு இலவச நீர்மோர்; அமைச்சர் சேகர்பாபு தகவல்

சென்னை, மார்ச் 14–

வெயிலின் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு கோவில்களில் கயிற்றால் ஆன விரிப்புகள் அமைக்கப்பட உள்ளதாகவும், முதல்கட்டமாக 48 முதுநிலை கோவில்களில் பக்தர்களுக்கு இலவச நீர்மோர் வழங்கப்படவுள்ளதாகவும் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னையில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "தமிழகத்தில் கருங்கல் பாதிக்கப்பட்டு வெயிலின் தாக்கத்தால், சூடேறி இருக்கும் கோவில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கயிற்றால் ஆன விரிப்புகளைப் பயன்படுத்த முடிவெடுத்துள்ளோம். மேலும், தமிழகத்தில் அதிகமான அளவில் பக்தர்கள் வருகைதரும் முதல்கட்டமாக 48 முதுநிலை திருக்கோவில்களில் நாளை முதல் இலவச நீர்மோர் வழங்கப்பட உள்ளது. அதன்படி நாளை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் இந்த திட்டம் தொடங்கி வைக்கப்படும்.

தமிழக முதல்வர் மக்களின் தேவைகளை நன்கு அறிந்தவர். எனவேதான், வெயிலின் தாக்கம் தொடங்குவதற்கு முன்பாக இந்த திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்டுள்ளார். முதல்வரின் உத்தரவின் பேரில் நேற்று அனைத்து மண்டலங்களிலும் உள்ள திருக்கோயில்களில் உழவாரப் பணிகள் தொடங்கப்பட்டது. இந்தப்பணிகளுக்கான உபகரணங்கள், இதில் ஈடுபடுபவர்களுக்கான உணவு உள்ளிட்டவைகள் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டன.

வரும் ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் பழநியில், உலக முருகர் பக்தர்கள் மாநாட்டை நடத்துவதற்கானப் பணிகளில் இந்துசமய அறநிலையத்துறை ஈடுபட்டு வருகிறது. என்றார்.

அப்போது அவரிடம் மத்திய சென்னை தேர்தல் பணிகள் எப்போது தொடங்கப்படும் என்பது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "மத்திய சென்னையைப் பொறுத்தவரையில், தமிழக முதல்வர் சுட்டிக்காட்டுகிற வேட்பாளருக்கு வெற்றி என்பது உறுதி செய்யப்பட்டுவிட்ட நிலையில், பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்ற முயற்சியில்தான் ஈடுபட்டு வருகிறோம்.

மத்திய சென்னை தொகுதியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர், 2014ல் பதவியில் இல்லாத காலத்தில்கூட, பேரிடர், கொரோனா, பொங்கல், ரம்ஜான் உள்ளிட்ட அனைத்து நிகழ்வுகளிலும் மக்களோடு கலந்திருந்தவர். தொகுதி உறுப்பினராக இல்லாவிட்டாலும் இவரை தேர்ந்தெடுக்கத் தவறிவிட்டோமே என்று மக்கள் கவலை அடைந்ததை காண முடிந்தது. உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட பிறகு, அவர் செல்லாத இடங்களே இல்லை என கூறினார்.

பொது அறிவிப்பு

டாக்டர் ராய் நினைவு மருத்துவ மையம்.
தேனாம்பேட்டை – 600018

மருத்துவப் பதிவு அழிப்பு

டாக்டர் ராய் நினைவு மருத்துவ மையத்தில் நாங்கள் 5 வருட காலத்திற்கான உள் நோயாளிகளின் மருத்துவப் பதிவேட்டை அழிப்போம் என்பதை பொதுமக்களுக்குத் தெரிவிக்கவே இது. 01.01.2014 முதல் 31.12.2018 வரை மேற்குறிப்பிடப்பட்ட பதிவேடு வசதி அழிக்கப்பட உள்ளதால், பதிவேட்டின் புகைப்பட நகல்களை வைத்திருக்க விரும்பும் நோயாளிகள் புகைப்பட அடையாளத்துடன் எங்கள் மருத்துவப் பதிவுத் துறையை மார்ச் 31 2024. முன் தொடர்பு கொள்ளலாம்.

எந்த விளக்கத்திற்கும் தொடர்பு கொள்ளவும்
மருத்துவப் பதிவுத் துறை 044 - 24949594

ஜீவா ரெயில் நிலைய சுரங்கபாதை மேம்பால கட்டுமானப் பணி: புரசைவாக்கம் கழிவு நீரிறைக்கும் நிலையம் 24 மணி நேரம் மூடல்

சென்னை, மார்ச் 14–

சென்னை மாநகராட்சியின் சார்பில் நடைபெற்று வரும் கணேசபுரம் வியாசர்பாடி ஜீவா ரெயில் நிலைய சுரங்க பாதை மேம்பால கட்டுமான பணிக்காக, டாக்டர் அம்பேத்கார் கல்லூரி சாலையில் 900 மி.மீ விட்டமுடைய கழிவுநீர் உந்து குழாயில் வால்வு பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் நாளை (15–ந் தேதி) மாலை 6 மணி முதல் 16–ந் தேதி அன்று மாலை 6 மணி வரை மண்டலம் 6க்கு உட்பட்ட புரசைவாக்கம் கழிவு நீரிறைக்கும் நிலையம் செயல்படாது என சென்னை குடிநீர் வாரியம் அறிவித்துள்ளது. எனவே, ராயபுரம், திரு.வி.க நகர், அண்ணா நகர், தேனாம்பேட்டை மண்டலங்களுக்கு உட்பட்ட இடங்களில் உள்ள இயந்திர நுழைவாயில்களில் கழிவுநீர் நிரம்பி வெளியேறும் நிலை ஏற்பட்டால் அவசரத் தேவைகளுக்காக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் மூலம் கழிவுநீரை வெளியேற்ற பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.

பாங்க் ஆப் இந்தியா
Bank of India BOI
மண்டல அலுவலகம் : மதுரை

அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகளை பொது ஏலத்தில் விடுவதற்கான அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள நகைக்கடன் பெற்ற கடன்தாரர்கள், அவர்தம் சட்ட பூர்வ வாரிசுகள், தங்க நகை / ஆபரணம் / காசு ஆகியவற்றின் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில் தொடர்ச்சியான நினைவூட்டுகள் / அறிவிப்புகள் ஆகியவை வங்கியால் அனுப்பப்பட்டிருப்பினும், கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் வங்கிக்கு வைத்துள்ள நிலுவையைத் திரும்பச் செலுத்தவில்லை.
அவர்கள் தங்களது கடன் கணக்கிற்கெதிராக நிலுவையிலுள்ள அனைத்துத் தொகையையும் (நாளது தேதி வரையான வட்டி மற்றும் பிற அனைத்துக் கட்டணங்கள், பொறுப்புகள் / செலவினங்கள் உள்ளிட்டவை) **27.03.2024** க்குள் செலுத்தத் தவறினால் அவர்கள் அடமானம் வைத்துள்ள தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகள் ஆகியவை வங்கி வளாகத்தில் **28.03.2024 அன்று காலை 11.00 முதல் பிற்பகல் 12.30 மணி வரை** பொது ஏலத்தில் விடப்படும் என்ற அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது. இதனால் தொடர்புடைய கடன்தாரர்களுக்கு ஏற்படும் எவ்வித இடைஞ்சல்களுக்கும், செலவினங்களுக்கும் வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது எனவும் இவ்விஷயம் தொடர்பாக எந்த ஒரு கடன்தாரரிடமிருந்து வரும் எந்த ஒரு கோரிக்கையும் குற்றச்சாட்டும் வங்கியால் நிராகரிக்கப்படும்.
இந்த ஏலத்தில் கலந்துகொள்ள விரும்பும் நபர்கள் ரூ.500/– ஐ குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் கிளை மேலாளரிடம் வைப்புத் தொகையாகச் செலுத்திவிடவேண்டும். இறுதி ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள் ஏலம் எடுத்த 48 மணி நேரத்திற்குள் ஏலத்தொகை முழுவதையும் வங்கிக்குச் செலுத்தாவிடில், அவர் வங்கிக்குச் செலுத்தியுள்ள வைப்புத் தொகை வங்கியால் திரும்பத்தரப்படாது. வங்கி, ஏலத்தில் கிடைக்கும் தொகை போதுமானதாக இல்லை எனவோ அன்றிக்குறைவானது எனவோ கருதினால் எந்த ஒரு காரணமும் காட்டாது ஏலத்தை ரத்து செய்ய உரிமையுடையதாகும். மேலும் தேவையெனில் வங்கி மேலே சொல்லப்பட்ட ஏல அட்டவணையில் குறிப்பிட்ட தேதி, நேரத்தை மாற்றவோ அல்லது எந்த ஒரு காரணமும் காட்டாது அதனை ரத்து செய்யவோ உரிமையுடையது.

சிதம்பரம் கிளை

வ. எண்.	கணக்கு எண்கள்.	கடன்தாரர்களின் பெயர்	முகவரி	மொத்த எடை (கிராமில்)
1	838777610007231	சரவணன்.S	34/1, திரௌபதி அம்மன் கோயில் வீதி, சிதம்பரம் – 608001	13

கடலூர் கிளை

வ. எண்.	கணக்கு எண்கள்.	கடன்தாரர்களின் பெயர்	முகவரி	மொத்த எடை (கிராமில்)
1	838673010000034	வெங்கடேஷ்	த/பெசந்திரதாசன், 10, மோரைமேட்டு வீதி, நெல்லிகுப்பம் பஜார், நெல்லிகுப்பம், கடலூர் (தமிழ்நாடு) 607002	12.3
2	838677610028462	ரங்கநாதன்.V	28, மேற்கு வீதி, அகரம் அஞ்சல், கடலூர் (தமிழ்நாடு) 607301	79.00
3	838677610027054	அருள்தாஸ்.K	49/1, கீழ வீதி, தென்னவராயன்பட்டு, விழுப்புரம் – 605501	24.00
4	838677610025310	உமா	க/பெ.குமார், எண்.2, நாயுடு வீதி, G N குப்பம், வழிசோதன்பாளையம் அஞ்சல், கடலூர் – 607303	12.00

தேதி : 13.03.2024

கிளை மேலாளர்
பேங்க் ஆப் இந்தியா

JMJ பின்டெக் லிமிடெட்

CIN: L51102TN1982PLC009711
கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயக வளாகம், எண். 3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர் 641006. மின்னஞ்சல்: investor@jmjfintechltd.com
இணையதளம்: www.jmjfintechltd.com

இந்த அறிவிப்பு மூலம் தெரிவிப்பது யாதெனில்:

1. கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்களை பரிவர்த்தனை செய்ய JMJ பின்டெக் லிமிடெட்டின் உறுப்பினர்களுக்கான அசாதாரண பொதுக் கூட்டம் (EOGM), ஏப்ரல் 04, 2024 வியாழக்கிழமை அன்று காலை 11.30 மணிக்கு காணொளி காட்சி மூலமாகவோ அல்லது வேறு ஏதேனும் ஆடியோ காட்சி மூலமாகவோ நடைபெறும்.
2. சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (CDSL) உடன் இணைந்து மின்னணு வாக்குப்பதிவு வசதி மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்துவதற்கான வசதியை நிறுவனம் வழங்க உள்ளது. மார்ச் 28, 2024 வியாழக்கிழமை அன்று பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம்.

உறுப்பினர்களுக்கு தெரிவிப்பதாவது:

a. மேற்கூறிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க மற்றும் காகித பிரதிகளை அனுப்புவதில் உள்ள சிரமங்கள் காரணமாக, பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நிறுவனம்/ டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் EGM அறிவிப்பின் மின்னணு நகல்களை அனுப்பும் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். EGM பற்றிய அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளத்திலும், www.jmjfintechltd.com, பங்குச் சந்தை இணையதளங்கள் மற்றும் டெபாசிட்டரிகளின் இணையதளத்திலும் கிடைக்கும். இந்த ஆவணங்களை www.jmjfintechltd.com மற்றும் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.
b. EGM அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வணிகங்கள் மின்னணு வாக்களிப்பு மூலம் பரிவர்த்தனை செய்யப்படும்.
c. மின்னணு முறையில் வாக்குப்பதிவு ஏப்ரல் 01, 2024 திங்கட்கிழமை காலை 09:00 மணிக்குத் (இந்திய நேரப்படி) தொடங்கும் மற்றும் ஏப்ரல் 03, 2024 புதன்கிழமை மாலை 05:00 மணிக்கு முடிவடைகிறது.
d. ஏப்ரல் 03, 2024 அன்று மாலை 5.00 மணிக்கு மேல் மின்னணு முறையில் வாக்களிப்பது அனுமதிக்கப்படாது.
e. அறிவிப்பின் நகல் www.jmjfintechltd.com என்ற நிறுவனத்தின் இணையதளத்திலும், www.evotingindia.com என்ற CDSL இணையதளத்திலும் கிடைக்கிறது.
f. மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காக, அறிவிப்பில் உள்ள மின்னணு வாக்களிப்பு குறித்த வழிமுறைகள் அல்லது மின்னணு வாக்களிப்பு இணையதளமான CDSL–ன் இணையதளத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQ) பிரிவு மற்றும் பயனர் கையேட்டைப் பார்க்கவும்.
g. மின்னணு வாக்குப்பதிவின் செயல்முறை மற்றும் முறை குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், helpdesk.evoting@cdslindia.com என்ற மின்னஞ்சல் மூலம் உறுப்பினர்கள் CDSLஐ தொடர்பு கொள்ளலாம் அல்லது நுவனத்தின் பங்கு பரிமாற்ற முகவர் M/s. பூர்வா ஷேர்ஜிஸ்ட்ரி (இந்தியா) பிரைவேட் லிமிடெட்டை தொடர்பு கொள்ளலாம்.
h. EGM அறிவிப்பு அனுப்பப்பட்ட நிறுவனத்தின் பங்குகளை வாங்கி உறுப்பினராகும் எந்தவொரு நபரும் மற்றும் கட்ஆஃப் தேதியில் பங்குகளை வைத்திருப்பவர் helpdesk.evoting@cdslindia.com–ல் கோரிக்கையை அனுப்புவதன் மூலம் உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லைப் பெறலாம். எவ்வாறாயினும், ஒரு நபர் ஏற்கனவே CDSL–ல் மின்னணு வாக்களிப்புக்காக பதிவு செய்திருந்தால், ஏற்கனவே உள்ள பயனர் ஐடி மற்றும் கடவுச்சொல்லை வாக்களிக்க பயன்படுத்தலாம்;
i. EGMக்கு முன்னதாக தொலைதூர மின்னணு வாக்களிப்பு மூலம் வாக்களித்த உறுப்பினர்களும் EGM–ல் கலந்து கொள்ளலாம் ஆனால் மீண்டும் வாக்களிக்க உரிமை பெற மாட்டார்கள்.
j. EGM–ல் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் மின்னணு வாக்குப்பதிவு செயல்முறை மற்றும் வாக்கெடுப்பை ஆய்வு செய்யும் ஆய்வாளராக திருமதி லட்சுமி சுப்ரமணியன், மூத்த பங்குதாரர், M/s. லக்ஷ்மி சுப்ரமணியன் & அசோசியேட்ஸ், பயிற்சி நிறுவன செயலாளர்கள், அலுவலகம் : முருகேச நாயக்கர் வளாகம், எண். 81, கிரீம்ஸ் சாலை, சென்னை 600006 அவர்களை நிறுவனம் நியமித்துள்ளது.
k. மின்னணு வாக்குப்பதிவின் முடிவுகளை நிறுவனம் அதன் இணையதளத்திலும் பங்குச் சந்தையிலும் அறிவிக்கப்படும்.

குழுவின் ஆணைப்படி
JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– திரு. ஜோஜு மடத்தும்பாடி ஜானி
நிர்வாக இயக்குனர்
DIN: 02712125

தேதி: 14.03.2024
இடம்: கோயம்புத்தூர்

media one Global Entertainment Limited

மீடியாஒன் குளோபல் எண்டர்டெயின்மெண்ட் லிமிடெட்

CIN: L65993TN2002PLC065402
பதிவு அலுவலகம்: பழைய எண். 1/38, புதிய எண். 1/38, மாதாஜி காம்ப்ளக்ஸ், ப்ளாட் எண்.32, வாலர்ஸ் ரோடு, முதல் சந்து, மவுண்ட் ரோடு, சென்னை–600 002.
email: contact@mediaoneglobal.in Website: www.mediaoneglobal.in

தபால் வாக்கு மின்–வாக்களிப்பு பற்றிய அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 (சட்டம்) பிரிவு 110 மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகள் ஏதேனும் இருப்பின் மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 (விதிகள்), விதி 22 மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015 (செபி பட்டியல் விதிகள்) விதி 44 மற்றும் கோவிட்–19 தொற்றுநோயைக் கருத்தில் கொண்டு எம்சிஏ–வினால் வெளியிடப்பட்ட தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு இணங்க, மார்ச் 08, 2024 தேதியன்று (கட்ஆப் தேதி), நிறுவனம் அல்லது டெபாசிட்டரிகளில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த நிறுவனத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் மின்னணு முறையில் மட்டுமே மார்ச் 13, 2024 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பை நிறுவனம் மார்ச் 13, 2024 அன்று அனுப்பி முடித்துள்ளது என்று இதன் மூலம் உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட